செ.வெ.எண்.153 நாள்.06.04.2017

**காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள்**

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர் கடன் பெறலாம்**

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவிப்பு**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது :

இந்திய அரசு, புழக்கத்திலிருந்து 500 மற்றும் 1,000 ரூபாய் நோட்டுகள், 09.11.2016 முதல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று அறிவித்ததைத் தொடர்ந்து, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாய உறுப்பினர்களுக்கு நேரடியாக கடன் வழங்க இயலாத நிலை ஏற்பட்டது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களுக்கு மத்திய வங்கி கிளைகள் மூலம் சேமிப்பு கணக்கு ஒன்றினை துவங்கி, அதன் மூலம் பயிர் கடன் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது இந்திய ரிசர்வ் வங்கியால், தனி நபர் சேமிப்பு கணக்கிலிருந்து வாடிக்கையாளர்கள் பணம் எடுப்பதற்கான உச்ச வரம்பினை 13.03.2017 முதல் முற்றிலுமாக தளர்த்தியதன் காரணமாகவும், விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, 01.04.2017 முதல் விவசாயிகளுக்கு தற்போது அவர்கள் உறுப்பினர்களாக உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலேயே ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி விவசாய பயிர் கடன் தொகையினை பெற்றுக் கொள்ளலாம் என அரசு அறிவித்துள்ளது.

இதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலேயே விவசாயப் பயிர் கடன் பெற்று பயனடையலாம்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.